**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகள் மற்றும் பணிபுரியும் / சுயதொழில் புரியும் மாற்றுத் திறனாளிகளுக்கு நவீன செயற்கை அவயங்கள் விலையின்றி வாங்கி வழங்கும் திட்டத்தினை 2016–17 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்துதல்– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை –வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி. 2.1)த் துறை

அரசாணை(1டி) எண்.10 நாள்:10–02–2017
துன்முகி, தை 28,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்க:

1. அரசாணை(1டி) எண்.12, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள்05–02–2016.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், ந.க.எண்.2112/ இவாததி–1/ 2016, நாள்04–08–2016.

------

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கால்முட்டிக்கு கீழ் பாதிக்கப்பட்ட கல்வி பயிலும் மாணவ, மாணவிகள் மற்றும் பணிபுரியும், சுயதொழில் புரியும் மாற்றுத்திறன் படைத்த நபர்கள், கால்முட்டிக்கு மேல் பாதிக்கப்பட்ட கல்வி பயிலும் மாணவ, மாணவிகள் மற்றும் பணியுரியும் / சுயதொழில்புரியும் மாற்றுத் திறன் படைத்த நபர்களுக்கு நவீன செயற்கை அவயங்களை வாங்கி வழங்கிட ரூ.32,25,000/– நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகள் மற்றும் பணிபுரியும் / சுயதொழில் புரியும் மாற்றுத் திறனாளிகளுக்கு நவீன செயற்கை அவயங்கள் விலையின்றி வாங்கி வழங்கும் திட்டத்தினை 2016–17 ஆம் நிதியாண்டில் இத்திட்டம் செயல்படுத்திட ஏதுவாக கடந்த ஆண்டு கொள்முதல் செய்யப்பட்ட விலையிலிருந்து 10% கூடுதலாக பின்வருமாறு நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:-

| வ.எண். | நவீன செயற்கை அவயம் | ஒன்றின் விலை | எண்ணிக்கை | மொத்த தொகை |
|---|---|---|---|---|
| 1. | கால் முட்டிக்கு கீழ் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறன் படைத்த நபர்களுக்கு (Below Knee) நவீன செயற்கை அவயம் | ரூ.20,900/– | 300 | ரூ.62,70,000/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | கால் முட்டிக்கு மேல் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறன் படைத்த நபர்களுக்கு (Above Knee) நவீன செயற்கை அவயம். | ரூ.36,300/– | 149 | ரூ.54,08,700/– |
| | மொத்தம் | | 449 | ரூ.1,16,78,700 /– |

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று கால்முட்டிக்கு கீழ் பாதிக்கப்பட்ட கல்வி பயிலும் மாணவ, மாணவிகள் மற்றும் பணியுரியும், சுயதொழில் புரியும் மாற்றுத்திறன் படைத்த 300 நபர்களுக்கு நவீன செயற்கை அவயம் ஒன்றின் விலை ரூ.20,900/– வீதம் ரூ.62,70,000/–மும், கால்முட்டிக்கு மேல் பாதிக்கப்பட்ட கல்வி பயிலும் மாணவ, மாணவிகள் மற்றும் பணியுரியும் / சுயதொழில்புரியும் மாற்றுத் திறன் படைத்த 149 நபர்களுக்கு நவீன செயற்கை அவயம் ஒன்றின் விலை ரூ.36,300/– வீதம் ரூ.54,08,700/– என ஆக மொத்தம் ரூ.1,16,78,700/– (ரூபாய் ஒரு கோடியே பதினாறு இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து எழுநூறு மட்டும்) நவீன செயற்கை அவயங்கள் வாங்கி வழங்கிட நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

“2235– சமூக பாதுகாப்பும் நலனும் –02 சமூக நலன் 101– மாற்றுத் திறனாளிகள் நலன்–I திட்டத்தில் சேராதது – CO மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு திட்டம் –24 பொருட்களும் வழங்குதலும்”.
(கு.தொ.கு.2235–02–101–CO–2407)

5. மேற்கண்ட நவீன செயற்கை அவயங்களை பெற விரும்பும் மாணவ, மாணவியர், சுயதொழில் புரியும் / பணிபுரியும் மாற்றுத் திறன் படைத்த நபர்களுக்கு கீழ்காணும் தகுதிகள் உடையவராக இருத்தல் வேண்டும்:-

i. மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை பெற்றிருத்தல் வேண்டும்.
ii. விண்ணப்பதாரர் மாற்றுத் திறனாளி மாணவர், மாணவியராக மற்றும் பணிபுரியும் / சுயதொழில்புரியும் மாற்றுத்திறன் படைத்த நபர்களாக இருத்தல் வேண்டும் கால் முட்டிக்கு கீழ் பாதிக்கப்பட்டவராகவோ (affected below knees) அல்லது கால் முட்டிக்கு மேல் பாதிக்கப்பட்டவராகவோ இருத்தல் அவசியம்.

6. மேலும் கீழ்காணும் அறிவுரைகளை பின்பற்றுமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(i) வல்லுனர்குழு உடன் அமைக்கப்பட்டு அரசுக்கு குழுவின் பரிந்துரைகளை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ii) மேலே பத்தி 2–ல் தெரிவிக்கப்பட்டுள்ள செயற்கை அவயங்கள் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ன்படி திறந்த ஒப்பந்த புள்ளி மூலம் கொள்முதல் செய்திட அனுமதிக்கப்படுகிறது.

(iii) செயற்கை அவயங்களை மேலே பத்தி 3–ல் குறிப்பிட்டுள்ள தோராய விலைக்குள் மட்டுமே முறைப்படி கொள்முதல் செய்ய வேண்டும்.

(iv) மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகையை பெற்று வழங்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது. மேலும், அடுத்த நிதியாண்டிற்கு இத்திட்டத்திற்கு கருத்துரு அனுப்பும்போது வல்லுனர் குழுவின் பரிந்துரை அடிப்படையில் கருத்துரு அனுப்புமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.4428/நிதி(சந)/2017, நாள் 08.02.2017–ன் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர்,சென்னை–18/35.
**நகல்:**
நிதித்துறை (சமூக நலம்) சென்னை–9.
இருப்புக் கோப்பு/ உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.